உ

சிவமயம்



# அமரர் திரு. சுப்பிரமணியம் மார்க்கண்டு

அவர்கள் இயற்கை எய்தியமை குறித்த

# நினைவு மஞ்சரி

01. 09. 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# திரு. சுப்பிரமணியம் மார்க்கண்டு

(முன்னாள் பணியாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்)

அவர்கள் இயற்கை எய்தியமை குறித்த

# நினைவு மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 09. 2008

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய்

திகழ்ந்து

அன்போடும், பண்போடும்

பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து

எம்மை நல்வழி நடாத்தி

இன்று வானுறையும்

தெய்வமாகிவிட்ட

எமது அன்புத் தெய்வத்தின்

பொன்னடிகளில் காணிக்கையாக

இந் நினைவு மலரினைச்

சமர்ப்பிக்கின்றோம்

– குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதித்தவள் மாடவீதி
மருகனிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கயரால் புனல் செல்வமல்கும்
சீர்கொள் செங்காட்டின் குடியதனுள்
கல்கும் விளங்கெரி ஏந்திஆடும்
கணபதீச்சரம் காமுறவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவர் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்தே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள்
அடியோருக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகி பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லை பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொளிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டம்முழ்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டுப் பார்ப்போம்

## அமரர் சு. மார்க்கண்டு அவர்களின்

# வாழ்க்கையை...

தெய்வீகத் தன்மையும், பலவகை வளங்களையும் கொண்ட மாதகல் கிராமத்தின் விபுலானந்தர் வீதியில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்த அமரர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியினருக்கு 1939ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி அமரர் மார்க்கண்டு பூமாதேவியின் மடியில் தவழ்ந்தார். இவரது அழகிய தோற்றம் காரணமாக இவரை மார்க்கண்டு என்ற நாமம் கூறி அழைத்தனர். அன்னார் அமரர்களான திருமதி செல்லத்துரை, திரு. இராமசாமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவர் தனது கல்வியை மாதகல் சென். யோசப் மகாவித்தியாலயத்தில் தொடங்கி J. S. C. வரை நன்றாகப் படித்தார். இவரது கல்வி நேர்மை காரணமாக அப்போதைய கல்லூரியில் இருந்த ஆசிரியர்களான திரு. கந்தையா, திரு. ஜேம்ஸ் ஆகியோர் 1961ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தில் இவரை இணைத்துக் கொண்டனர். அன்னார் தனது திறமை காரணமாக பேக்கரி விற்பனையாளர், பேக்கரி மேற்பார்வையாளர், சமாச டிப்போ விற்பனையாளர், பிரதான களஞ்சிய பொறுப்பாளர் என நாற்பது ஆண்டுகள் சேவைசெய்து ஓய்வு எடுத்துக்கொண்டார். சேவைக்காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பதங்களுக்கு வரைவிலக் கணமாக திகழ்ந்ததால் பலதடவைகள் நிர்வாகத்தினரால் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். அன்னார் ப. நோ. கூ. சங்கத்தில் பணியாற்றிய போதும் தனது சொந்த தொழிலான விவசாயத்தையும் கைவிடவில்லை. அன்னார் உறவினர், அயலவர்களுடன் நன்றாக பழகுவதுடன் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்து வந்ததால் தற்போது அவர் பிரிவால் சகலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயருறுகின்றனர். விவசாயத்தில் முன்மாதிரியாக அன்னார் திகழ்ந்ததால் விவசாயம் அன்னாருக்கு நன்கு முகம் பார்க்கும் என எல்லோரும் கூறுவர். இவற்றுக்கெல்லாம் அன்னாரது அன்பான பேச்சும் அயராத உழைப்புமே காரணம் என கூறுவர்.

அன்னார் மாதகலைச் சேர்ந்த அமரர்களான இராஜசிங்கம், மாணிக்கம், என்போரின் மகளான ஜெயலட்சுமியை திருமணம் செய்து அதன்பேறாக ஜெயமாலினி, கிருஷ்ண குமார், ஜெயசுபாகர், ஜெயசுபாசினி, விஜேந்திரவாசன், சசிகலாதேவி, கிருஷ்ணலீலா ஆகியோரை தமது செல்வங்களாக கொண்டார். திரு. தயானந்தராசா, திரு. நந்தகுமார், சிவனேஸ்வரி, சஜீத்தா, ஆகியோரை மருமக்களாகவும் கொண்டார். யுகர்ணியா, ஹரிகரன், நேருஜன் ஆகியோர் அன்னாரது பேரரும் ஆவர். அன்னாரின் மைத்துனர்கள் திரு. இ. தங்கராசா, திரு. இ. துரைராசா ஆகியோர் ஆவர்.

அன்னார் தெய்வத்தில் பூரண நம்பிக்கை கொண்டவர். தனது குலதெய்வமாகிய அம்பாளை தினமும் பூசித்துக் கொள்வதுடன் நுணசை முருகன், அரசடி விநாயகர், ஞானவைரவர் ஆகியோரையும் வணங்குவார். திருவிழாக் காலங்களில் விரதமிருந்து தேருக்கு முண்டி போட்டு தனது விரதத்தை முடித்து கொள்வதும் வழமையாகும். நோய் இருந்தபோதும் மனோதிடம் காரணமாக இறுதிமூச்சுவரை உழைப்பு மூலம் உயர்ந்தவர். அன்னாரின் இழப்பு குடும் பத்தினருக்கும், உறவினருக்கும் பேரதிர்ச்சியை கொடுத்த போதும் அன்னார் எல்லாம் வல்ல பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தத்தை நன்கு தழுவிக்கொண்டதால் இறைவன் அருளும் பெற்றார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார் அமரர் மார்க்கண்டு என்னும் மானிடன்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்கள்

## மனைவி புலம்பல்

கைப்பிடித்த நாள் முதலாய்க்
        கலக்கமின்றி வாழ வைத்தீர்
மை எழுதிய கண்ணில் இன்று
        மழை பொழிய வைத்துவிட்டீர்
காவலனாய் இருந்த உம்மை
        காலனவன் பறித்து விட்டான்
மெய் என்றே நம்பியிருந்தேன்
        பொய்யாகி போனதென்னவோ
வெய்யிலில் வீழ்ந்த புழுவைப்போல
        வேதனையில் துடிக்கின்றேன்
ஐயா இனி உம்மை நான்
        எங்கு காண்பதோ?

## பிள்ளைகள் அங்கலாய்ப்பு

எழுவராக பிறக்கவைத்து அன்பினால் ஒன்றிணைத்தீர்
        கூறுபட வாழாது குலவி நாளும்
குணக்குன்றாய் நின்றீரே குவலயத்தில்
        வேறுபட்டு நின்றாலும் வீட்டிலின்று
வேறுயார் எமக்குண்டு உம்மைப்போல்
        நீறுபட்டு போனீர் நீர் என்ற போதும்
நெஞ்சமே வெடிக்குதப்பா என் செய்வோம்
        உளப்பாடு பெரும்பாடாய் தூக்கமின்றி
பாசமொடு வளர்த்ததை எண்ணியெண்ணி
        அழுகின்றோம் உம் பிள்ளைகளாய் அப்பாவே

## தவிக்கும் மைத்துனர்கள்

மைத்துனம் என்பதற்கு பொருளுமில்லை நாமறிந்தோம்
        வையத்தில் உம்மைப்போல் உதவுவோரை நாமறியோம்
சைவத்தின் நெறிநின்ற சந்திர முகத்தோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளின் அன்பனே மார்க்கண்டேயனே
வெய்யிலோ மழையோ நீர் வேறாக எண்ணாமல்
மெய்வருந்த உழைத்தீரே உயர்ந்தவரே
உய்வதற்கு வழிபலவும் நீர் காட்டி தந்ததாலே
பொய்த்திடா வாழ்வை நாமும் புகழோடு பெற்றிருந்தோம்
பொய்யிந்த வாழ்கையென்று எமை உணர வைத்திட்டோ
மெஞ்ஞான நிலை பெற்றீர் மேதினியை விட்டகன்றே!

## சுகமான காற்று சுவாசமற்று போனது

ஒப்பில்லா மனிதராய் ஒளி வீசிடும் தீபமாய்
தப்பில்லா வாழ்க்கையை தரணியில் வாழ்ந்து தளிர் விடும்
பூக்களாய் தங்கங்களைப் பெற்று
ஒப்பில்லா வாழ்க்கையை கண்டீர்
குலவிளக்கே அப்பா நீங்கள் எமக்கு தெரு
விளக்காய் எம் பாதையில் இருந்தீர்
தேடுகின்றோம் தெருவெல்லாம் இருட்டு
செப்பினால் உம் கதையை அப்பா
செவிடடும் எம் குளறல் கேட்டு
கதறுகின்றோம் தந்தையே உம் பரிதவிப்பு

தன்னுயிராய் மன்னுயிரை எண்ணி வாழ்ந்த உள்ளம்
பாங்கான வாழ்வை
பக்குவமாய் தந்த உள்ளம்
மண்பூத்த மாமாவே நீங்கள் விண் பூத்து விட்டதனால்
ஓயா கவலையினால் உடையுதப்பா எம் உள்ளம்

மா. கிருஷ்ணகுமார் (மகன்)
கி. சிவனேஸ்வரி (மருமகள்)
நவாலி அரசடி, மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்று காண்பேன் அப்பாவே

தந்தையோடு தாய் போலும் பேணி வளர்த்து
என்னை இவ்வுலகில் வாழவைக்க பெரும் பாடு பட்டீர்கள்
எந்தையென நான் பேற்ற மகிழ்ந்திருந்த அப்பாவே
உம்மை நான் காண்பதெனி எப்போதோ!
நோயால் நான் நொந்திட்டால் உயிர் துடிக்கும்அப்பாவே!
என்னை தீயினால் புழுங்கவைத்து உயிர் விட்டு போனீரோ!
வான் உயர் வகை எல்லாம் செய்து வைத்த அப்பாவே!
இனி வீடு வந்தால் காண்பதெனி யாரையோ!
நகர் கடந்து நானிங்கே உமை விட்டு வாழ்ந்தாலும்
இடரின்றி உயிரை நான் உம்மிடமே வைத்திருந்தேன்
உலகுக்கு உத்தமராய் விளங்கிய அப்பாவே!
உமைப்போல ஒருவரை இனி என்று நான் காண்பேனோ!

**ஜெயமாலினி தயானந்தராசா.**

# மாண்புமிகு எழில் பொங்கும் மாதகல் மண் பெற்றெடுத்த மாமா

அன்புடன் என்னை மருமகளாக்கி
சிலநாட்களாவது தன்னுடன் இருக்க
வேண்டும் என்று கூறி அறுசுவை உணவு படைத்து
ஆடை அணிகலன் போட்டு அழகு பார்த்து
ஆசைக்கதை பேசி அன்புடன் புத்திமதிகள் கூறி
மாநகராம் கொழும்பதனில் மணம் செய்து மகிழ்ந்து
மக்களோடெல்லாம் அளவளாவி ஊர்
திரும்பிய சந்தோஷத்தில் இருந்த உம்மைக் கண்டு
காலனுக்கும் பொறுக்கவில்லையோ மாமா?
எப்போ லண்டன் போய் சேர்வாய் என்று
கேட்கும் நீங்கள் நான் போய் சேர்ந்ததும்
தங்கள் கடமை முடிந்தது என்று நினைத்தீரோ?

மாமியை மறந்தீர்களோ?
மக்களை மறந்தீர்களோ?

பொறுக்கவில்லை என் இதயம்
எப்படித்தான் ஆறுதல் அடைவோம்
ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**மருமகள்**
**சஜீத்தா ஜெய சுபாகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அருமை ஆலோசகர்

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மூத்த பணியாளராகவும், ஆரம்பகால பணியாளராகவும் இருந்து இயற்கை எய்திய அமரர் சுப்பிரமணியம் மார்க்கண்டு அவர்கள் ஸ்தாபனத்தில் ஒரு விசுவாசமான பணியாளராக கடைமை ஆற்றி இவ் ஸ்தாபன வளர்ச்சிக்கு தன்னால் முடியுமான அதி உச்ச சேவையை வழங்கியதோடு மட்டுமல்லாது, அவரிடம் இருந்து யாம் பல அறிவுரைகளைப் பெற்றமை தற்போது எமது ஸ்தாபன வளர்ச்சிக்கு பயன்படுவதாக அமைந்துள்ளது. எனவே இச்சங்கம வரலாற்று ரீதியாக அவரை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொது முகாமையாளர்,**
பண்டத்தரிப்பு பரிஸ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

## நேற்றிருந்தவர் இன்றில்லை

எமது இதயங்களில் இடம் பிடித்த எமது முன்னாள் சங்க பணியாளர் சுப்பிரமணியம் மார்க்கண்டு இன்று இல்லை. இவர் நோய் நொடி எனப் பாயில் படுத்திருக்காது பரமனடி சேர்ந்துள்ளார்.

இவர் எமது சங்கத்தில் இச் சங்க அமைப்பு உருவாக்கப்பட முன்னரே இருந்த கூட்டுறவுச் சங்க பணியாளராக சோர்ந்து புனரமைப்புச் செய்யப்பட்ட பின் யாம் அறிந்த காலந் தொட்டு சங்கத்தின் சிட்டைலிகிதராகவும், களஞ்சியப் பொறுப்பாளராக வும், கொள்வனவு உத்தியோகத்தராகவும் கடமை ஆற்றியுள்ளார். இவர் ஒரு விவசாயியாகவும் இருந்த படியால் விளைப்பொருள், உற்பத்திப்பொருள், நுகர்ச்சிப்பொருள், என்பவற்றை தரம்பார்த்து கொள்வனவு செய்தல், களஞ்சியமுறை, பொருள்பாதுகாப்பு போன்ற விடயங்களில் அனுபவரீதியான ஆற்றல் பெற்றவராக விளங்கினார். நிர்வாகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமை என்பன காலத்திற்கு காலம் பணித்த கடமைகளை எதுவித சளைப்புமின்றி செய்வதோடு மாத்திரமல்லாது முகாமைத்துவத்திற்கு இத்துறை சார்ந்த ஆலோசனைகளை வழங்கக்கூடிய தகுதியானவராக காணப்பட்டார். இவர் தமது கடமைகளை கடமையுணர்வோடும் நேர்மையாகவும் ஒரு விசுவாசமான பணியாளராக கடமை ஆற்றி சகலரது நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

40 வருடங்களுக்கு மேலாக கடமைஆற்றிய பொழுது தொழிலாளர் தமது உரிமைகளுக்காக போராடிய காலத்தில் அதற்கு ஆதரவாக செயற்பட்டு தொழிற்சங்கத்துடன் இணைந்து பல வெற்றிகளுக்கு காரணமாக இருந்தார். பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராகவும் சில காலம் நிர்வாகி ஆகவும் கடமை ஆற்றினார். தற்போதுள்ள பணியாளர்களில் அவரது காலத்தில் கடமை ஆற்றியவர்களில் இவரே சேவை மூப்பில் உள்ளவராக இருந்து ஏனைய பணியாளராகி எங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வழிநடத்திய படியால் நாம் எல்லோராலும் “மார்க்கண்டு அண்ணை” என அழைக்கப்பட்டு எமது உள்ளங்களில் இடம் பிடித்துள்ளார்.

பிறப்பு என்று ஒன்று என்று நடந்ததோ இறப்பு என்று ஒன்று உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இதற்கமைய அன்னாரும் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்துள்ளார். இதன் மூலம் உன்னதமான ஒரு குடும்பத் தலைவனை இழந்து நிற்கும் அவரது குடும்பத்திற்கு எமது அழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அக்குடும்பத்தினருக்கு இவ்விழப்பைத்தாங்கும் சக்தியை கொடுத்துஅருள வேண்டு மென்று இறைவனை பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் பண். கிளை,**
**பண். ப. நோ. கூ. சங்க பணியாளர் சி. க. கூ சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திலகத்திற்கு ஓர் அஞ்சலி

மாதகல் விபுலானந்தர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் சுப்பிரமணியம் மார்க்கண்டு எனது அன்பர் ஆவார்.

இவர் இல்லறம் என்னும் நல்லறம் நடத்தி பல மக்கட் செல்வங்களையும் பேரப்பிள்ளைகளையும் பெற்று சிறப்பாக வாழ்ந்த உத்தமராவர்.

இவர் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமை ஆற்றியுள்ளார். நல்ல உள்ளம் படைத்தவராக இருந்தார். இவர் சிறந்த கடவுள் பக்தி உள்ளவராகவும் மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில் உப தலைவராகவும் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் புன்சிரிப்பு எனக்கு இப்பவும் நினைவாக இருக்கின்றது.

தெய்வகாரியங்கள் மட்டுமல்லாது பிதிர் காரியங்களையும் சிறப்பாக செய்ய வேண்டுமென்ற மன விருப்பால் அந்தணர்களைப் போற்றி பூசித்து தனது பிதா மாதாக்களின் சிரார்த்தங்களை அன்புடனே காலம் தவறாது செயள்து மன மகிழ்ச்சி அடைந்தார்.

சகல செல்வங்களும் பெற்று சிறப்புடனே வாழ்ந்த இவர் 02/08/2008 சனிக்கிழமை அன்று அம்பாளின் திருவடிகளை அடைந்தார். அமரரைப் பிரிந்து துயருடன் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அம்பாளின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**"உறங்குவது போலும் சாக்காடு**
**உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"**

**இங்ஙனம்**
**பிரம்மஸ்ரீ செ. சுந்தரேஸ்வரசர்மா**
பிரதமகுரு, ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில்
**மாதகல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் உறைவிடம்

அமரர் சுப்பிரமணியம் மார்க்கண்டு வாழ்வின் பல படிகளைக் கண்டு இறைவனடி சேர்ந்தவர். இவர் தன் வாழ்நாளில் அமைதியைப் பேணி அனைவருடனும் அன்பு பாராட்டி வாழ்ந்தவர் மாற்றுக் கருத்துக்களைக் கேட்டு அன்புடனே தன் கருத்துக்களை முன் வைத்தவர். தன் வாழ்நாளில் இவர் எவருடனும் கடுஞ்சொல் சொல்லாதவராக திகழ்ந்தவர். மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான சபையில் அங்கத்தவராக, நிர்வாக உறுப்பினராக செயற்பட்டு கோயில் பணிகள் சிறக்க யாவருடனும் ஒத்துழைத்தவர். கோயில் திருப்பணிக்கு தன்னாலான உதவி, ஒத்தாசை வழங்கியவர். திரு மார்க்கண்டு எம்மை விட்டு திடீரென பிரிந்து விட்டார். அவர் வாழ்வில் அமைதியை கடைப்பிடித்தமையால் நோயின் கொடுமை நீண்ட நாள் அனுபவியாது அவரின் உயிர் அமைதியாக பிரிந்தது. அவரை இழந்து நிற்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாளை வேண்டி நிற்கின்றோம்.


**நிர்வாக சபையினர்,**
மாதகல், பாணாக வெட்டி
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
இந்து தர்ம பரிபாலன சபை

**மாதகல்,**
**01/09/2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



நன்றி தனை நவில்கின்றோம் நம்மிதயங்கனிந்த எம் குலவிளக்கு அணைந்த வேளை உடன் இருந்த உற்றார்களே! பெரியோரே! அயலவர்களே! நண்பர்களே! சர்வதேச நாடெங்கும் தொலையில் இருந்த வண்ணம் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவுகளே! இறுதிவரை இடர்கருதாது உடனிருந்த நெஞ்சங்களே! தோளோடு தோழாக எம் பாரத்தை சுமந்த உள்ளங்களே! நண்பர்களே! கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டவர்களே! அனைத்து அன்பு உள்ளங்களிற்கும், இன்று நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு உதவி புரிந்தோருக்கும் இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத்தந்த பண்டத்தரிப்பு J.S அச்சகத்தினருக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகள் பல.


**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

மாதகல்,
பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**



Sivaranjanam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org